**The New Indian Express, Chennai, Aug 13 2008**

# டாடா இண்டிகாம் பிரத்யேக ஷோரூம் திறப்பு

**தேனி,ஆக.11-**

இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் தொலைதொடர்பு சேவை நிறுவனமான டாடா இண்டிகாம் நிறுவனம் கம்பத்தில் டாடா இண்டிகாம் உலகம் எனும் பிரத்யேக ப்ரீபெய்டு ஷோரூமை தொடங்கியுள்ளது. இதில் டாடா இண்டிகாமில் கிடைக்கக் கூடிய அனைத்து ப்ரீபெய்டு திட்டங்கள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும்.

இந்த ஷோரூம் தொடக்க விழாவில் டாடா டெலிசர்வீசஸ் லிமிடெட்டின் தமிழ்நாடு பகுதி சர்க்கிள் ஆபரேடிங் ஆபிசர் சங்கீத்திகராம் பேசும்போது, தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள வாடிக்கையாளர்களையும் சென்றடைய வேண்டும். அவர்களுக்கு எங்கள் தயாரிப்புகள் கிடைப்பதை எளிமையாக்க வேண்டும். டெலிபோனில் அக்சசரிஸ், ஹேண்ட்செட், ரீசார்ஜ் கூப்பன்கள், ஆட் ஆன் பேக்ஸ் அல்லது வாடிக்கையாளர் சேவை எந்த ஒரு வாடிக்கையாளர் தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்யும் மையமாக இந்த ஷோரூம் அமையும். தமிழ்நாட்டில் 2009 ம் ஆண்டுக்குள் இதுபோல் மேலும் 68 ப்ரீபெய்டு ஷோரூம் திறக்க திட்டமிட்டுள்ளோம் என்றார்.

வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்த ஷாப்பிங் அனுபவத்தை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் மிகச்சிறந்த வாடிக்கையாளர் தொடர்பு மையமாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்திலும் தொழில்முறையாக பயிற்சி அளிக்கப்பட்ட விற்பனை அதிகாரிகளின் உயர்ந்த தனிப்பட்ட சேவை அங்கு அளிக்கப்படுகிறது.